# 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ஆம் தேதி வெள்ளிக் கிழமை மதியம் 12.15 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

<u>பொருள் எண். 1.</u>

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2022–2023 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் படிவங்கள், பதிவேடுகள், விண்ணப்பங்கள், எழுது பொருட்கள், கணினி பிரிண்டர், பிரிண்டிங் ரிப்பன், வெள்ளைத்தாள்கள், நோட்டுகள் வீட்டு வரி ரசீது வாங்குவதற்கு இராமநாதபுரம் மாவட்ட கூட்டறவு அச்சகம் லிமிடெட் காரைக்குடி அச்சகத்தில் வாங்கிக் கொள்ளவும் மற்றும் அதற்கான தோராய செலவின தொகை ரூ. 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்தில் பதிவேடுகள் மற்றும் எழுது பொருட்கள் வாங்கியதை மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 01 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 2.</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–இ, பிளாக்–50, நகரளவை எண். 8ல் உள்ள பெரியார் நகர் சாலையை திருமதி. ஜெயா, க/பெ. ரவி என்பவர் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதை அகற்ற கோரி திரு. கே. ராஜேந்திரன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.No. 14474/2021ல் நகராட்சியை மூன்றாம் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கில் ஆக்கிரமிப்பு அகற்ற தீர்ப்பு வரப்பெற்றது. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் திருமதி. ஜெயா என்பவர் அதனை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். 1211/2022ல் தடை கோரி இந்நகராட்சியை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு எண். 1211/2022ல் விருத்தாசலம் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை நடத்தி வரும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. பி. சீனிவாஸ் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1-** மன்றம் அனுமதிக்கலாம்.
**2-** மேற்படி செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3424/2021/எப்1)

**தீர்மானம் எண். 02 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–இ, பிளாக்–116, நகரளவை எண். 6/26 இடத்திற்கு பட்டா வழங்கும் போது அளவு குறைவாக உள்ளதாகவும் அதனை எதிர்த்து இந்நகராட்சியை ஒரு பிரதிவாதியாக சேர்த்து திருமதி. ஜி. வளர்மதி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். CRP. PD.No.36/2022 மற்றும் CMP.No. 235/2022ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் விருத்தாசலம் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கை நடத்தி வரும் திரு. D. கோபால், அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 601/2022/எப்1)

**தீர்மானம் எண். 03 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4.**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–ஜி, பிளாக்–6, நகரளவை எண். 19/3B2ல் திரு. அன்புராஜ் மற்றும் திருமதி. கவிதா என்பவர் நகராட்சி அனுமதியின்றி விலை நிலத்தில் பன்னை வீடு கட்டியுள்ளார். இதனை எதிர்த்து திரு. ராஜேந்திரன் த/பெ. பெரியசாமி என்பவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண். 25512/2021ல் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகியுள்ள திரு. V.P. இளம்பரிதி, கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 20,000/–ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1-** மன்றம் அனுமதிக்கலாம்.

**2-** மேற்படி செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 6517/2021/எப்1)

**தீர்மானம் எண். 04 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 5.**

விருத்தாசலம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–22 ன் கீழ் ரூ.228.61 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தார்சாலை பணிகள் மற்றும் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் வடக்கு பெரியார் நகரில் பூங்கா மேம்படுத்தும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் FLAME ADVERTISING COMPANY PVT LTD ,CHENNAI நிறுவனம் மூலம் மாநில அளவில் தினசரி நாளிதழ்களில் வெளியிட்டதற்கான தொகை கீழ்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தினசரி நாளிதழ் பெயர் | விளம்பரம் வெளிவந்த நாள் | தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1. | **Daily Thanthi publication** | 23.11.2021 | 76250/– |
| 2. | **Deccan chronicle publication** | 23.11.2021 | 34650/– |
| | **CGST – 2.5 %** | | 2772.50 |
| | **SGST – 2.5 %** | | 2772.50 |
| | **Total** | | 116445.00 |

அலுவலக குறிப்பு.

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 05 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6.**

விருத்தாசலம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–22 ன் கீழ் ரூ.105.60 இலட்சம் மதிப்பீட்டில் அரசு ஆண்கள் பள்ளியில் முன்பக்க சுற்றுசுவர் மற்றும் கலையரகம் அமைக்கும் பணிகள் மற்றும் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் வடக்கு பெரியார் நகரில் பூங்கா மேம்படுத்தும் பணிகளுக்கான (மறுஒப்பந்தம் )ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் FLAME ADVERTISING COMPANY PVT LTD ,CHENNAI நிறுவனம் மூலம் மாநில அளவில் தினசரி நாளிதழ்களில் வெளியிட்டதற்கான தொகை கீழ்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தினசரி நாளிதழ் பெயர் | விளம்பரம் வெளிவந்த நாள் | தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1. | **Malai Murasu** | 04.12.2021 | 20000/– |
| 2. | **Deccan chronicle publication** | 04.12.2021 | 34650/– |
| | **CGST – 2.5 %** | | 1366.25 |
| | **SGST – 2.5 %** | | 1366.25 |
| | **Total** | | 57383.00 |

அலுவலக குறிப்பு.
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 06 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட விருத்தாச்சலம் கிராமம் வார்டு–இ, பிளாக் எண்.70, நகரளவு எண்.212/1, 212/3, 214/1 ல் 2.46 ஏக்கர் அல்லது 9976.66 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குனர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ,நாள்24.12.2020 மற்றும் அரசாணை(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(M.1) நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் மாவட்டம் அவர்கனின் கடித ந.க.எண் 912/2021/கமா நாள்10.12.2021ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு. த. பால்ராஜ் மற்றும் ஐவர்கள் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்காவிற்குண்டான வழிகாட்டு மதிப்பு தொகை ரூ.1,25,000/–ம் உதவி இயக்குனர், நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் செலுத்தப்பட்டு நகல் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் இந்நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 4816/2021, நாள் 06.12.2021 லும் தானப்பத்திர எண். 4980/2021, நாள் 16.12.2021லும் இந்நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தானப்பத்திர எண். 4817/2021, நாள் 06.12.2021ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார்.

மனுதாரர் மேற்படி மனைபிரிவில் தரமான தார் சாலை மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் பதிதிதுள்ளார் இருப்பினும் அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD(4)) நாள் 09.12.2020 மற்றும் அரசாணை(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை(M.1) நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020 ல் காணும் TNCDBR 2019 விதி எண் 47(11) ன் படி அடிப்படை வசதிகளுக்கான கட்டணம் வசூலிக்க தெரிவித்துள்ளதற்கிணங்க அடிப்படை வசதிக்கட்டணம் ரூ11,17,000/– ம், தெருவிளக்கு அமைப்பதற்கானமின் கம்பங்கள் மற்றும் வழித்தடங்கள் அமைப்பதற்கானகட்டணமாக ரூ.1,77,000 /–ஐ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தி ரசீது சமர்ப்பித்துள்ளார். மேலும் அரசு விதிகளின்படி செலுத்த வேண்டிய இதர கட்டணங்கள்ரூ.50500 வசூலிக்கப்பட்டுள்ளது எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார் மற்றும் அரசு விதிகளின்படி செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களையும் நகராட்சிக்கு செலுத்தியுள்ளார். எனவே, நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மனைபிரிவிற்கு அனுமதி வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.2830/2021/எப்1)

**தீர்மானம் எண். 07 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 8.</u>

விருத்தாசலம் நகராட்சி பொதுபிரிவு , வருவாய் பிரிவு , பொது சுகாதார பிரிவு , நகரமைப்பு பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள கனிணிகள் , பிரிண்டர்கள் , நெட்வொர்க் சுவிட்சுகள் சரிவர செயல்படுத்துவதற்கும் மற்றும் பழுதடையும் கனிணி உபகரணங்களுக்கு மாற்றாக புதிய கனிணி உபகரணங்கள் வழங்கி ஆண்டு பராமரிப்பு செய்யும் பணிக்கு கடந்த ஆண்டு விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய SUMARAJ IT SOLUTIONS,B5/42,Kannan Nagar,Second street,Thanjavur நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது ஆண்டு பராமரிப்பு காலம் முடிவடைந்துவிட்டதால் 2022 –2023ம் ஆண்டுக்கு அதே நிறுவனம் கடந்த ஆண்டு செய்த அதே விலைவிகிதத்தில் ஆண்டு பராமரிப்பு செய்து தர சம்மத கடிதம் அளித்துள்ளதற்கிணங்க , மேற்படி SUMARAJ IT SOLUTIONS,B5/42,Kannan Nagar,Second street,Thanjavur நிறுவனம் கனிணி ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் , அதற்கு ஏற்படும் செலவினத்தொகை ரூ.1,50,000/– க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 08 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 9.</u>**

திரு. ரஜாக், **97/1/3** , அகத்தியர் தெரு , தெற்கு பெரியார் நகர் , விருத்தாசலம் என்பவர் விருத்தாசலம் நகராட்சியில் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்து தரக்கோரி சொத்து மதிப்பு சான்று, வில்லங்க சான்று, GST பதிவு சான்று, பான் கார்டு, மங்களூர் ஒன்றியத்தில் ஒப்பந்ததாராக பதிவு செய்த சான்று மற்றும் ஆதார் கார்டு நகல்களுடன் விண்ணப்பித்துள்ளார். எனவே, அன்னாரை விருத்தாசலம் நகராட்சியில் முதல் வகுப்பு ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 09 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட **1** முதல் **33** வரை உள்ள பகுதிகளில் மொத்தம் **3126** தெருவிளக்குகள் உள்ளன.இவற்றை இயக்கி மற்றும் அணைக்கும் பணிக்காக **250** எண்ணிக்கை சுவிச்சுகள் உள்ளன.இவற்றில் முதற்கட்டமாக மின்கட்டணத்தை குறைக்கும்விதமாக **57** எண்ணிக்கை தானியங்கி தெருவிளக்கு இயக்கி/அணைக்கும் கருவிகளை(Automatic Street Light Timer Switch) கொள்முதல் மற்றும் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**9,86,500/–**க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 10 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட **1** முதல் **33** வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் , பிரதான குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்திட நகராட்சி வசம் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் பராமரிப்பு செய்திட முதற்கட்டமாக ஏற்படும் செலவினத்தொகை ரூ.**5,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 11 நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 12.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் டிராக்டர் வாகனம் எண். TN-31-AL-6192 வாகனத்தின் ஆயில் தடித்த நிலையில் உள்ளதால் வாகனத்தை இயக்குவதற்கு கடினமாக உள்ளதாகவும், மேலும் வாகனத்தில் உள்ள சிறு பழுதுகளை நீக்கம் செய்து தரக்கோரி ஓட்டுநர் குறிப்பு வழங்கியுள்ளார். மேலும் ஆயில் சர்வீஸ் மற்றும் பழுது நீக்க பணிக்கு மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான நிறுவனத்திடமிருந்து ரூ. 13,260/– ஆகும் என விலைப்புள்ளி எனவே குடிநீர் பணியில் அவசரம் கருதி மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான RK Auto Mobiles நிறுவனத்திடம் பழுது நீக்கம் செய்யவும் அதற்கு ஏற்படும் செலவினத்தொகை ரூ. 13260/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. குடிநீர் பணியில் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று RK Auto Mobiles நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 12 நாள். 08.04.2022.**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண். 13.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொதுபிரிவு , வருவாய் பிரிவு , பொது சுகாதார பிரிவு , நகரமைப்பு பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள பிரிண்டர்களின் டோனர் ரீபிள் மற்றும் சர்வீஸ் செய்ய 2022–2023ம் ஆண்டுக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 13 நாள். 08.04.2022.**
**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண். 14.</u>**

விருத்தாசலம் நகராட்சி சுமார் 25.57 சதுர கி.மீட்டர் கொண்ட முதல் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் நடைபெறும் குடிநீர் பணிகள் , பொது சுகாதார பணிகள் ,தெருவிளக்கு பணிகள் மற்றும் திட்டப்பணிகளை நகர்மன்ற தலைவர் ஆய்வு செய்வதற்கு நகர்மன்ற தலைவருக்கு Mahindra Boliro வாகனம் உள்ளது. மேற்படி வாகனம் வாங்கி சுமார் 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு பழுது நீக்கம் செய்திட அதிக செலவினம் ஏற்படுகிறது. எனவே , மேற்படி வாகனத்தை பொறியாளருக்கு வழங்கிவிட்டு புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவருக்கு புதியதாக Mahindra Morrozo (GEM Rate ) வாங்கவும் மற்றும் இந்நகராட்சி ஆணையர் பயன்பாட்டில் உள்ள Mahindra Boliro வாகனம் வாங்கி சுமார் 15 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் அடிக்கடி பழுது ஏற்பட்டு பழுது நீக்கம் செய்திட அதிக செலவினம் ஏற்படுகிறது. எனவே , மேற்படி வாகனத்தை Condempt செய்துவிட்டு ஆணையர் பயன்பாட்டிற்கு புதியதாக Mahindra Scorpio (GEM Rate) வாங்கவும் மற்றும் பொறியாளருக்கு புதியதாக Mahindra Boliro (GEM Rate) வாங்கவும் , மேற்படி மூன்று வாகனம் வாங்க ஏற்படும் தோராய செலவினத்தொகை ரூ.45.00 இலட்சத்திற்கும் (Including Tax ,Insurance , Extra Fittings & Accessories)மற்றும் மேற்படி

மூன்று வாகனம் வாங்க அனுமதி கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உரிய கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 14, நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15.**

விருத்தாசலம் நகராட்சிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி நகரில் உள்ள நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நகர்ப்புற சுகாதார நல மைய கட்டிடம் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை மாவட்ட அளவில் கீழ்கண்ட தினசரி நாளிதழில் வெளியிட்டதற்கான தொகை கீழ்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தினசரி நாளிதழ் பெயர் | விளம்பரம் வெளிவந்த நாள் | தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1. | தினகரன் | 30.12.2021 | 8820/– |
| | Total | | 8820/– |

**அலுவலக குறிப்பு.**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 15, நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **1** முதல் **33** வரை உள்ள பகுதிகளில் இயக்கத்தில் உள்ள குடிநீர் வழங்கும் மோட்டார்களின் வெளிப்புறத்தில் Non-return Valve மற்றும் வால்வுகள் இல்லாத காரணத்தினால் மின் துண்டிப்பு மற்றும் மோட்டார்களை நிறுத்தம் செய்யும் போது உந்தப்பட்ட குடிநீர் மீண்டும் ஆழ்துளை கிணற்றில் வேகமாக இறங்குவதால், மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. எனவே இதனை தடுக்கும் பொருட்டு அனைத்து மோட்டார்களில் முதற் கட்டமாக Non-return Valve, வால்வுகள் மற்றும் இதர உபகரணங்களை பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. **5,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 16, நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17.**

இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி, வட்டி, அரசு மான்யம் ஆகியவை வழங்கிட கோரி பணியாளர்கள் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுகள் விண்ணப்பம் அளித்துள்ளார்கள். எனவே 2022– 2023ஆம் ஆண்டுக்கு ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மற்றும் இறந்த பணியாளர்கள் வாரிசுகளுக்கு சிறப்பு சேமநலநிதி, அதற்கான வட்டி தொகை , அரசு மான்யம் ஆகியவை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 17, நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18.**

விருத்தாசலம் நகராட்சிகுட்பட்ட 1 முதல் 33 வார்டுகளிலும் உள்ள அனைத்து தெருவிளக்குகளிலும் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர்செய்து பராமரிப்பு செய்ய தேவைப்படும் தெருவிளக்கு மின் உதிரி பொருட்கள் வாங்க ஏற்படும் செலவினத்தொகை ரூ. 5,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 18, நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் உள்ள சமுதாய கழிவறைகள், பொது கழிவறைகள்,நகராட்சி பள்ளிகள் கழிவறைகள்,அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி கழிவறை மற்றும் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி கழிவறைகள் தற்போது பயன்பாட்டில் கீழ்கண்டவாறு உள்ளது.

**சமுதாய கழிவறைகள்**

1. நாச்சியார்பேட்டை
2. செல்லியம்மன் கோயில் தெரு.
3. பூதாமூர் காலணி
4. பூதாமூர் பூந்தோட்டம்
5. இரட்டை தெரு
6. சித்தலூர்
7. பழமலைநாதர் நகர்
8. மேட்டுக்காலணி

**பொது கழிவறைகள்**

1. நரிகுறவர் காலணி
2. கஸ்பா காலணி
3. எம்.ஜி.ஆர் நகர்

## பள்ளி கழிவறைகள்

1. நகராட்சி நடுநிலைப்பள்ளி ,புதுப்பேட்டை.
2. நகராட்சி துவக்கப்பள்ளி,திரு.வி.க நகர்
3. நகராட்சி நடுநிலைப்பள்ளி ,பூதாமூர்
4. நகராட்சி துவக்கப்பள்ளி,பூந்தோட்டம்
5. நகராட்சி துவக்கப்பள்ளி,அய்யனார் கோயில் தெரு.
6. நகராட்சி துவக்கப்பள்ளி,சாத்துக்கூடல் சாலை.
7. நகராட்சி துவக்கப்பள்ளி,சாவடிகுப்பம்
8. நகராட்சி துவக்கப்பள்ளி,மணலூர்
9. நகராட்சி நடுநிலைப்பள்ளி,தென்கோட்டை வீதி
10. நகராட்சி துவக்கப்பள்ளி,பெரியகண்டியங்குப்பம்
11. நகராட்சி துவக்கப்பள்ளி,வயலூர்.
12. அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி
13. அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி

மேற்கண்ட 24 எண்ணிக்கை கழிவறைகளில் 22 கழிவறைகள் 30.11.2021 வரை தனியார் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.5000/– விலை விகிதத்தில் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் 01.12.2021 முதல் நகராட்சி பணியாளர்களை கொண்டு அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வந்தது.இந்நிலையில் தற்போது நகராட்சியில் போதிய தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினசரி மேற்படி கழிவறைகளை சுத்தம் செய்ய இயலாத நிலை உள்ளது.எனவே மேற்கண்ட 24 எண்ணிக்கை சமுதாய கழிவறைகள், பொது கழிவறைகள்,நகராட்சி பள்ளிகள் கழிவறைகள்,அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி கழிவறை மற்றும் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி கழிவறைகளை தனியார் மூலம் செய்திடவும் அதற்கு ஆறு மாத காலத்திற்கு ஏற்படும் செலவினத்தொகை ரூ. 8,64,000/–க்கு ( 24 X 6000 X 6 Months = 8,64,000/-) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 11 எண்ணிக்கை சமுதாய கழிவறைகள் மற்றும் பொது கழிவறைகளை பொது நிதியிலிருந்தும் மற்றும் 13 எண்ணிக்கை பள்ளி கழிவறைகளை கல்வி நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 19, நாள். 08.04.2022.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20.**

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 5,00,000/– மதிப்பீட்டில் விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள 173 மின்மோட்டார்கள் (1 எச்.பி முதல் 35 எச்.பி வரை) பழுது நீக்கம் செய்யும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மாணம் எண். 4493, நாள்.21.01.2022ல் அனுமதி அளித்தற்கிணங்க 29.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டைவிட விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.வி.ரமேஷ், | (-) 0. 15 % குறைவு |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்ததாரர் | |
| 2. | திரு.இரா.சுப்பிரமணியன்,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.56 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.வி.ரமேஷ், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள **0.15** % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 20, நாள். 08.04.2022.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 21.</u>

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15—ஆவது மத்திய நிதி ஆணையம், 2022—2023—ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019—ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022—2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>**சொத்துவரி:**</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் விருத்தாசலம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 5.50 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.72 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம்<br>(டுபிட்கோ, டுபிசெல், பிற) | 1.65 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 1.17 |
| மொத்தம் | | 9.04 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், விருத்தாசலம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண். | வார்டு | தெருவின் பெயர் | மண்டலம் |
|---|---|---|---|
| 1. | 12 | ஸ்ரீ சக்தி நகர் விரிவாக்கம் மெயின் தெரு | C |
| 2. | 12 | ஸ்ரீ சக்தி நகர் விரிவாக்கம் கார்டன் | C |
| 3. | 13 | அமராவதி நகர் – அண்ணா நகர் | C |
| 4. | 13 | அண்ணா நகர் – பைபாஸ் சாலை | C |
| 5. | 13 | அண்ணா நகர் – காவேரி நகர் | C |
| 6. | 13 | அண்ணா நகர் – குலவிளக்கு மண்டபம் தெரு | C |
| 7. | 13 | அண்ணா நகர் – ரோஜாப்பூ தெரு 1 மற்றும் 2 | C |
| 8. | 14 | தாஷ்கண்ட் நகர் இறக்கம் பகுதி 1வது தெரு | C |
| 9. | 14 | தாஷ்கண்ட் நகர் இறக்கம் பகுதி 2வது தெரு | C |
| 10. | 14 | தாஷ்கண்ட் நகர் இறக்கம் பகுதி 3வது தெரு | C |
| 11. | 15 | இந்திரா நகர் – சி.என்.சி நகர் சந்திப்பு சாலை | C |
| 12. | 16 | சாய் நகர் பெரியார் நகர் வடக்கு | B |
| 13. | 16 | சோமசுந்தரம் நகர் பெரியார் நகர் வடக்கு | B |
| 14. | 16 | வைரவ வீதி பெரியார் நகர் வடக்கு | B |
| 15. | 16 | தமிழர் தெரு, பெரியார் நகர் தெற்கு | B |
| 16. | 16 | வி.ஐ.பி தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 17. | 16 | முல்லை தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 18. | 16 | வசந்தம் நகர் முதல் தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 19. | 16 | வசந்தம் நகர் 2வது தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 20. | 16 | வசந்தம் நகர் ஜம்மு தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 21. | 16 | வசந்தம் நகர் ஜம்மு குறுக்கு தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 22. | 16 | வில்வவீதி பெரியார் நகர் தெற்கு | B |
| 23. | 16 | மாஸ்கோ தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 24. | 16 | வசந்தம் நகர் குமரன்தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 25. | 16 | செந்தமிழ் தெரு பெரியார் நகர் தெற்கு | B |
| 26. | 16 | பாரதியார் மெயின் ரோடு – பாலாஜி நகர் | B |

| | | | |
|---|---|---|---|
| 27. | 16 | பாரதியார் முதல் தெரு – பாலாஜி நகர் | B |
| 28. | 16 | பாரதியார் 2வது தெரு – பாலாஜி நகர் | B |
| 29. | 16 | பாரதியார் 3வது தெரு– பாலாஜி நகர் | B |
| 30. | 16 | அம்மன் தெரு – பாலாஜி நகர் | B |
| 31. | 16 | பசுமை தெரு – பாலாஜி நகர் | B |
| 32. | 16 | கலைமகள் தெரு – பாலாஜி நகர் | B |
| 33. | 16 | ஜான்சிராணி தெரு – பாலாஜி நகர் | B |
| 34. | 16 | சரோஜினி நாயுடு தெரு – பாலாஜி நகர் | B |
| 35. | 16 | பெருமாள் கோயில் தெரு – பாலாஜி நகர் | B |
| 36. | 16 | ரோஜாப்பூ தெரு விரிவாக்கம் – வசந்தம் நகர் | B |
| 37. | 16 | எம்.ஜி.ஆர் நகர் 1 வது தெரு | C |
| 38. | 17 | பெஸ்கி தெரு – தங்கம் நகர் | C |
| 39. | 17 | கலைவாணர் தெரு | C |
| 40. | 17 | ரெயின்போ சிட்டி நகர் | A |
| 41. | 17 | லாவண்யா கார்டன் நகர் | B |
| 42. | 19 | தெற்கு தெரு – அம்மா நகர் 1வது தெரு | C |
| 43. | 19 | தெற்கு தெரு – அம்மா நகர் 2வது தெரு | C |
| 44. | 19 | தெற்கு தெரு – அம்மா நகர் 3வது தெரு | C |
| 45. | 31 | தில்லை நகர் – எம்.ஜி.ஆர் தெரு | C |
| 46. | 31 | தில்லை நகர் – வெற்றி விணாயகர் தெரு | C |
| 47. | 31 | தில்லை நகர் – காமராஜர் தெரு | C |
| 48. | 31 | தில்லை நகர் – அங்காளம்மன் கோவில் தெரு | C |
| 49. | 31 | தில்லை நகர் – துர்கா தெரு | C |
| 50. | 31 | தில்லை நகர் – விவேகாணந்தர் தெரு | C |
| 51. | 31 | தில்லை நகர் – சரஸ்வதி தெரு | C |
| 52. | 31 | தில்லை நகர் – டாக்டர் அப்துல் கலாம் தெரு | C |
| 53. | 31 | தில்லை நகர் – முருகன் கோவில் தெரு | C |
| 54. | 31 | தில்லை நகர் – தேவி அபிநந்தன் தெரு | C |
| 55. | 31 | தில்லை நகர் – நேதாஜி தெரு | C |
| 56. | 31 | தில்லை நகர் – அப்பர் தெரு | C |
| 57. | 31 | தில்லை நகர் – ஸ்ரீ கணபதி நகர் | C |
| 58. | 31 | தில்லை நகர் – வி.ஐ.பி நகர் 1 | C |
| 59. | 31 | தில்லை நகர் – வி.ஐ.பி நகர் 2 | C |
| 60. | 31 | தில்லை நகர் – வி.ஐ.பி நகர் மெயின் ரோடு | C |
| 61. | 31 | சேலம் பைபாஸ் நகர் – ஜெயபிரியா நகர் | C |
| 62. | 31 | தில்லை நகர் – கிருஷ்ணா தெரு | C |
| 63. | 31 | ஆலிச்சிகுடி ரோடு – சுபம் கார்டன் 1 | C |
| 64. | 31 | ஆலிச்சிகுடி ரோடு – சுபம் கார்டன் 2 | C |
| 65. | 31 | தில்லை நகர் – சிங்கம் நகர் பைபாஸ் சாலை | C |
| 66. | 32 | காந்தி நகர் 3வது தெரு வித்யா மந்திர் பள்ளி செல்லும் இணைப்பு சாலை. | C |
| 67. | 32 | காந்தி நகர் 3வது தெரு தில்லை நகர் செல்லும் இணைப்பு சாலை. | C |
| 68. | 33 | சேலம் பைபாஸ் சாலை | C |
| 69. | 33 | கடலூர் பைபாஸ் சாலை | C |
| 70. | 33 | பைபாஸ் சாலை விரிவாக்கம் – சித்தலூர் | C |
| 71. | 33 | சேதுபதி நகர் பைபாஸ் சாலை | C |
| 72. | 33 | மாருதி நகர் பைபாஸ் சாலை | C |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 21, நாள். 08.04.2022.**
அனுமதிக்கப்பட்டது.

**ஆணையாளர்,**
**விருத்தாசலம் நகராட்சி.**